(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 185.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2012 மே 22, செவ்வாய்க்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0993/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எரிவாயுக் கம்பனியானது எப்போது செல் கம்பனி லிமிடட்டிற்கு விற்கப்பட்டது என்பதையும்;

(ii) விற்கப்பட்ட பங்குகளின் விலையையும் வீதத்தையும்;

(iii) எரிவாயுக் கம்பனியை விற்றபோது ஆட்சியிலிருந்த சனாதிபதியின் பெயரையும் அரசாங்கத்தையும்;

(iv) விற்ற திகதியிலிருந்து மீளக் கொள்வனவு செய்த திகதி வரையில் அரசாங்கத்திற்குக் கிடைத்த இலாபத்தினையும்;

(v) செல் டேர்மினலிலே அரசாங்கம் கொண்டுள்ள பங்கினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) செல் கம்பனி லிமிடட்டின் பங்குகளை மீளவாங்குவதற்கு அரசாங்கம் செலுத்திய விலையினையும்;

(ii) அரசாங்கம் மீளவாங்கிய பங்குகளின் வீதத்தையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட இந்த மீள் கொள்வனவு எப்போது மேற்கொள்ளப்பட்டது என்பதையும்;

(iv) விலைப் பெறுமதி குறித்து எவ்வாறு இணக்கம் காணப்பட்டது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1301/ '11

2.

கௌரவ புத்திக பதிரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை மற்றும் பெலிஅத்த ஆகிய இரண்டு தேர்தல் தொகுதிகளையும் அண்மித்ததாக உள்ள நலகம வில்அத்தர எனும் பகுதியில் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் பழைமைவாய்ந்த நாமயால ஏரி அமைந்துள்ளது என்பதையும்;

(ii) 2005 ஆம் ஆண்டில் மேற்படி ஏரியும், அதனைச் சூழவுள்ள காணிகளும் குடிநீர் கருத்திட்டமொன்றுக்காக அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டது என்பதையும்;

(iii) மேற்படி இடத்தில் தங்காலை – பெலிஅத்த இணைந்த நீர் வழங்கும் திட்டம் எனும் பெயரில் நீர் கருத்திட்டமொன்றுக்காக 2005.10.05 ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டுள்ள போதிலும், இதுவரை மேற்படி நிர்மாணிப்பு நடவடிக்கைகள் இடம்பெறவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நீர் கருத்திட்டத்தின் ஊடாக நீர் வழங்க திட்டமிடப்பட்டிருந்த குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அதன் வேலைகளை துரிதமாக ஆரம்பித்து பிரதேச மக்களின் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின் அதன் வேலைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(iv) அதற்கு செலவாகும் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) நீர் வழங்கல் திட்டம் காரணமாக காணிகளை இழந்துள்ள மக்களுக்கு காணிகளை வழங்குவதற்காக தகுந்த முறையியலொன்று தயாரிக்கப்படுமா?

(ii) அவ்வாறாயின், அது யாது?

(ஈ) இன்றேல், ஏன்?

1621/ '11

3.

கௌரவ அனுர திஸாநாயக்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) மிஹின் லங்கா நிறுவனத்தின் தற்போதைய உயர்மட்ட உத்தியோகத்தர் சபையிலும் பணிப்பாளர் சபையிலும் பணியாற்றுபவர்கள் யாவர்;

(ii) மேற்படி ஒவ்வொரு உத்தியோகத்தரினதும், பணிப்பாளர் சபை உறுப்பினரதும் கல்வி மற்றும் தொழில் தகைமைகள் யாவை;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும் சம்பள அளவுகள், ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மிஹின் லங்கா நிறுவனத்தின் 2010ஆம் ஆண்டுக்கான ஐந்தொகையின் பிரகாரம் ரூபா 5.6 பில்லியன் சொத்துக்கள் நிலுவை காணப்படுகின்றதா;

(ii) அவ்வாறாயின், அதில் தாக்கம் செலுத்திய காரணிகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1985/ '11

4.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2005ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரைலும் மற்றும் 2011ஆம் ஆண்டிலும் மதுபான விற்பனை நிலையங்களை ஆரம்பிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை யாது;

(ii) 2005ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் மதுபான உரிமப்பத்திரம் பெற்றவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iii) மதுபான விற்பனைக்கான உரிமப்பத்திரங்களை வழங்குகையில் பின்பற்றப்படும் நடைமுறை யாது;

(iv) மேலே அ(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டுகளில், மதுபான விற்பனை நிலைய உரிமப்பத்திரங்களை வழங்குதன் மூலம் அரசாங்கம் ஈட்டிய வருமானம் வருடாந்த ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது மதுபான விற்பனைக்காக உரிமைப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) இதில் எதிர்காலத்தில் உரிமப்பத்திரம் வழங்கப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை யாது;

(iii) இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல்,ஏன்?

2000/ '11

5.

கௌரவ அஜித் பி. பெரேரா,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நிமல் புஞ்சிஹேவா என்பவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பதவியொன்று வகிப்பதை ஆரம்பித்த திகதி யாதென்பதையும்

(ii) இவர் பிறந்த திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி நபர் 60 வயதைத் தாண்டிய பின்னரும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சேவையாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், அது எப்போது என்பதையும்;

(v) இவ்வாறான அங்கீகாரம் வழங்கப்படவில்லையெனின் 60 வயதை தாண்டிய திகதி தொடக்கம் இன்று வரை மேற்படி நபர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சட்டத்திற்கு முரணான விதத்திலேயே சேவையாற்றியுள்ளார் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(vi) ஆமெனின், மேற்படி நபர் தொடர்பில் எடுக்கப்படும் எதிர்கால நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2017/ '11

6.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புனித பிரதேசங்களுக்கருகில் அனுமதியின்றி வசிக்கும் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கின்ற கருத்திட்டமொன்று நடமுறையில் உள்ளதா;

(ii) ஆமெனில், எந்த புனித பிரதேசங்களை மையமாகக் கொண்டு மேற்படி கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2031/ '11

7.

கௌரவ சஜித் பிரேமதாச,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பல்வேறு சர்வதேச பல்கலைக்கழகங்களின் இணைந்த நிறுவனங்களாக வெளிக்காட்டிக்கொண்டு குறித்த பல்கலைக்கழகங்களின் பெயரின் கீழ் இயங்கி வரும் அநேகமான தனியார் கல்வி நிறுவனங்கள் தற்போது இலங்கையில் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) அரச பல்கலைக்கழகங்களுக்கான அனுமதியை இழந்த பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் மேற்படி கல்வி நிறுவனங்களில் அனுமதியைப் பெறுவதற்கு முயற்சி செய்கிறார்கள் என்பதையும்;

(iii) இவர்களில் வசதியில்லாத சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் இருக்கின்றார்கள் என்பதையும்;

(iv) மேற்படி ஒருசில கல்வி நிறுவனங்கள் வெறுமனே பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் மாத்திரம் நடாத்தப்படுகின்றன என்பதையும்;

(v) ஒருசில கல்வி நிறுவனங்கள் எந்தவோர் அங்கீகாரமும் இல்லாத சான்றிதழ்களை வழங்கியுள்ளன என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கையில் தற்போது பல்வேறு சர்வதேச பல்கலைக்கழகங்களின் பெயர்களின் கீழ் இயங்கி வரும் தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பான தொகைமதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், அத்தகைய நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) அவ்வாறான கல்வி நிறுவனங்களை பேணிவருவதற்குத் தேவையான பண்பையும் தரத்தையும் பரிசீலித்து முறைசார்ந்த பதிவொன்றைப் பெற்றுக்கொள்வதை கட்டாயமாக்கும் வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2109/ '11

8.

கௌரவ ஜோன் அமரதுங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கலதாரி ஹோட்டல் லங்கா பிஎல்சி, லாப்ஸ்கேஸ் (Laugh Gas) பிஎல்சி மற்றும் சிலோன் கிரைன் எலிவேடர்ஸ் (Ceylon Grain Elevators) ஆகியவற்றில் ஊழியர் சேமலாப நிதியம் கொண்டுள்ள பங்குகளின் எண்ணிக்கையையும்;

(ii) பங்குகளின் தொகுதி ஒவ்வொன்றும் கொள்வனவு செய்யப்பட்ட திகதிகளையும்;

(iii) மேற்குறிப்பிட்ட பங்குகள் கொள்வனவு செய்யப்பட்ட விலை யாதென்பதையும்;

(iv) பங்குகள் யாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன என்பதையும்;

(v) பங்குகள் பின்னர் விற்பனை செய்யப்பட்டிருப்பின், விற்கப்பட்ட நபர்களின் பெயர்களை பங்குத் தொகுதி அடிப்படையிலும்;

(vi) மேற்குறிப்பிடப்பட்ட பங்குகளின் ஒவ்வொரு தொகுதியும் விற்கப்பட்ட விலையையும்;

(vii) இக்கொடுக்கல் வாங்கல்களில் சம்பந்தப்பட்ட தரகர்களின் பெயர்களையும்

அவர் இச்சபைக்கு வெவ்வேறாக அறியத்தருவாரா?

(ஆ) இன்றேல், என்?

2156/ '11

9.

கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தின் பலாங்கொடை, கிரிமெற்றிதென்ன பிரதேசத்தில் அமைந்துள்ள பீங்கான் ஓட்டுத் தொழில்சாலை சுமார் ஒரு வருட காலமாக மூடப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி தொழில்சாலை பிரதேசத்தைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கியிருந்தது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்தை மூடுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தை மூடும் போது அதில் சேவையாற்றிய அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு நட்டஈடு செலுத்தப்பட்டதா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்குக் காரணமாயமைந்த விடயங்கள் யாவை என்பதையும்;

(iv) பிரதேச மக்களினதும், நாட்டினதும் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக மேற்படி தொழில்சாலை மீண்டும் ஆரம்பிக்கப்படுமா என்பதையும்;

(v) அவ்வாறாயின், அதற்கென திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1650/ '11

10.

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) மாத்தறை மாவட்டத்தில் அக்குறஸ்ஸ, அத்துரலிய பிரதேச சபையின் கலாசார மத்திய நிலையத்தின் நிர்மாணப் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள தென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கலாசார மத்திய நிலையத்தை நிர்மாணிப்பதற்காக நிதி வழங்கிய நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(ii) இதற்காக மதிப்பிடப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்;

(iii) நிர்மாணப் பணிகளை நிறுத்துவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) அத்துரலிய கலாசார மத்திய நிலையத்தின் நிர்மாணப் பணிகள் விரைவில் நிறைவு செய்யப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனின், இதற்கு எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

1740/ '11

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 யூலை முதல் இற்றைவரை வருடவாரியாக,

(i) சீனியின் மொத்த நுகர்வு மற்றும் தலா நுகர்வையும்;

(ii) அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தலா உற்பத்தியையும்;

(iii) இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் அளவையும்;

(iv) இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் பெறுமதியையும்;

(v) சீனி இறக்குமதியாளர்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட உண்மையான மானியத்தை ஒப்புறுதிப்படுத்தும் சான்றுகளுடனும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கையில் 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில் 1கிலோகிராம் சீனிக்கான உற்பத்திச் செலவினத்தையும்;

(ii) இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட 1 கிலோகிராம் சீனியின் மீது விதிக்கப்பட்ட எல்லா (நேரடி மற்றும் மறைமுக) வரிகளையும்

அவர் தனித்தனியாகக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1986/ '11

12.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது அரசாங்கத்திற்குச் சொந்தமாகவுள்ள தனியார் கம்பனிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இக்கம்பனிகளின் பெயர்களும் அவை உரியதாயுள்ள அமைச்சுக்களும் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) ஒவ்வொரு கம்பனியினதும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு கம்பனியிலும் இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமாக வுள்ள பங்குகளின் சதவீதம் மற்றும் தனியார் துறையினால் முதலீடு செய்யப்பட்டுள்ள பங்குகளின் சதவீதம் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(v) தனியார் முதலீட்டாளர்களின் பெயர்களும் முகவரிகளும் ஒவ்வொரு கம்பனி வாரியாக யாவையென்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு கம்பனியும் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் பெற்றுள்ள தேறிய இலாபம் அல்லது நட்டம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1651/ '11

13.

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் அட்டகலம்பன்ன பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்கு உட்பட்ட ஹிரமடலகம மத்திய மருந்தகம் மூடப்பட்டுள்ளதையும்;

(ii) இதனால் பிரதேச மக்களுக்கு பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளதென்பதையும்:

அவர் அறிவாரா?

(ஆ) (i) புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சீரான நிலையில் இருந்த போதிலும் மேற்படி மருந்தகத்தை மூடிவிடுவதற்கு காரணமான விடயங்கள் யாதென்பதையும்;

(ii) மேற்படி மருந்தகத்தை துரிதமாக திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனின், இதற்கு எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1741/ '11

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 யூலை முதல் இற்றைவரை வருடவாரியாக,

(i) பருப்பின் மொத்த நுகர்வு மற்றும் தலா நுகர்வையும்;

(ii) அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் தலா உற்பத்தியையும்;

(iii) இறக்குமதி செய்யப்பட்ட பருப்பின் அளவையும்;

(iv) இறக்குமதி செய்யப்பட்ட பருப்பின் பெறுமதியையும்;

(v) பருப்பு இறக்குமதியாளர்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட உண்மையான மானியத்தை ஒப்புறுதிப்படுத்தும் சான்றுகளுடனும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கையில் 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில், 1 கிலோகிராம் பருப்பிற்கான உற்பத்திச் செலவினத்தையும்;

(ii) இறக்குமதி செய்யப்பட்ட பருப்பு மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பருப்பு ஆகியவற்றின் மீது விதிக்கப்பட்ட (நேரடி மற்றும் மறைமுக) வரிகள் அனைத்தையும்

தனித்தனியாக அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1987/ '11

15.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டளவில் உயர் கல்வி அமைச்சின் கீழ் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றுக்குரிய நிறுவனங்களுக்கு பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் பணி ஒப்படைக்கப்பட்டிருந்த தனியார் பாதுகாப்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பாதுகாப்பு நிறுவனத்தினாலும் பாதுகாப்பு வழங்கப்படும் பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றுக்குரிய நிறுவனங்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டளவில் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் ஈடுபடுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் தற்சமயம் ஈடுபடுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருக்கு 2010 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட பணத் தொகை மற்றும் தற்போது செலுத்தப்படும் பணத்தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் மாதாந்தம் பாதுகாப்புக்காக செலவிடும் பணத் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

கௌரவ ஜே.ஆர்.பி. சூரியப் பெரும,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"அபிமானி சமூக அபிவிருத்தி மற்றும் கலாசார மன்றத்தைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2)ஆம் பந்தி மற்றும் 1985ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க மற்றும் 1987ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1969ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 14 ஆம் பிரிவு மற்றும் 4ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2012 ஏப்பிறல் மாதம் 18ஆம் திகதிய 1754/9ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.05.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 02.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1),— 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.3 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.03

2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "புகையிரத களஞ்சிய முற்பணக் கணக்கு - இலங்கை புகையிரதத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 1,000,000,000 இலிருந்து ரூபா. 1,700,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட வரவுகளின் உச்ச எல்லை — ரூபா. 4,838,000,000 இலிருந்து ரூபா. 5,037,000,000 வரை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட செலவுகளின் உச்ச எல்லை — ரூபா. 500,000,000 இலிருந்து ரூபா. 800,000,000 வரை.

(இக்கட்டளை 2011.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2012.05.09 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 03.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.2),— 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல. 27இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.27

2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 01002ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "இலஞ்சத்தைக் கண்டுபிடிப்பதற்காக இலஞ்சமாகப் பயன்படுத்துவதற்கு முற்பணம் - இலஞ்சம் அல்லது ஊழல் சார்த்துதல்களை கண்டுபிடிப்பதற்கான ஆணைக்குழு" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட வரவுகளின் உச்ச எல்லை — ரூபா. 7,500,000 இலிருந்து ரூபா. 12,000,000 வரை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட செலவுகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2011.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2012.05.09 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 04

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.3),— 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல. 42இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.42

2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 25002ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "ஏனைய அரசாங்கங்களுக்கு கொடுக்க வேண்டிய முற்பணம் - அரச கணக்குகள் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 4,600,000 இலிருந்து ரூபா. 4,750,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — ரூபா. 4,600,000 இலிருந்து ரூபா. 4,450,000 வரை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட வரவுகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட செலவுகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2011.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2012.05.09 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 05.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.4),— 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல. 43இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.43

2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 28502ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "கமத்தொழில் பண்ணைகளின் பராமரிப்பும் விதை விற்பனை முற்பணக் கணக்கு - கமத்தொழில் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 300,000,000 இலிருந்து ரூபா. 355,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — ரூபா. 270,000,000 இலிருந்து ரூபா. 292,000,000 வரை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட வரவுகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட செலவுகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2011.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2012.05.09 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 06.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.5),— 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல. 44இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.44

2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31002ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் “அரசாங்க தொழிற்சாலையின் களஞ்சிய முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை” என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 120,000,000 இலிருந்து ரூபா. 172,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட வரவுகளின் உச்ச எல்லை — ரூபா. 10,000,000 இலிருந்து ரூபா. 31,000,000 வரை

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட செலவுகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2011.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2012.05.09 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 07.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.6),— 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல. 45இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.45

2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31003ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அரசாங்க தொழிற்சாலையில் செய்த வேலைகள் முற்பணக் கணக்கு - அரசாங்க தொழிற்சாலை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா. 260,000,000 இலிருந்து ரூபா. 345,000,000 வரை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட வரவுகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட செலவுகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(இக்கட்டளை 2011.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2012.05.09 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 08.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.7),— 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல. 46இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழான கட்டளை இல.46

2010ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல் பிரச்சாரம் மற்றும் விற்பனைக்காக பயன்படுத்துவதற்கு முற்பணம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் உச்ச எல்லை — ரூபா. 2,900,000,000 இலிருந்து ரூபா. 2,300,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட வரவுகளின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட செலவுகளின் உச்ச எல்லை — ரூபா. 500,000,000 இலிருந்து ரூபா. 900,000,000 வரை

(இக்கட்டளை 2011.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2012.05.09 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 09.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.8),— 2010ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட கீழ்க்காணும் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. (பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

(இக்கட்டளை 2010.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

## அட்டவணை

### 2010 ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழான கட்டளை

நிதி ஆண்டு 2011 தொடர்பில், 2010 ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சினால் அதிகாரமளிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான முற்பணங்கள் சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | விடய இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள் | | III அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லைகள் | | IV அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பற்று மீதிகளின் உச்ச எல்லைகள் | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | |
| 1. | பாதுகாப்பு அமைச்சு | 10301 | 48,670,000 | 238,670,000 | 17,600,000 | 117,600,000 | 200,000,000 | 560,000,000 | 1 |
| 2. | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 10601 | - | - | - | - | 10,000,000 | 13,000,000 | 2 |
| 3. | அமைச்சரவை அலுவலகம் | 00501 | 1,256,000 | 1,800,000 | - | - | - | - | 4 |
| 4. | பொலிஸ் திணைக்களம் | 22501 | 1,686,297,000 | 1,496,297,000 | 1,100,000,000 | 1,000,000,000 | - | - | 5 |
| 5. | தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | 12701 | 27,475,000 | 11,475,000 | 8,500,000 | 2,000,000 | - | - | 6 |
| 6. | அஞ்சல் திணைக்களம் | 30801 | - | - | 525,000,000 | 480,000,000 | - | - | 7 |
| 7. | கமநல சேவைகள் வனசீவராசிகள் அமைச்சு | 17901 | - | - | - | - | 2,000,000 | 20,000,000 | 8 |
| 8. | தொழில் திணைக்களம் | 22101 | - | - | - | - | 160,000,000 | 240,754,151.36 | 9 |
| 9. | சிவில் பாதுகாப்பு அமைச்சு | 32001 | 141,300,000 | 170,000,000 | - | - | - | - | 10 |
| 10. | கமத்தொழில் அமைச்சு | 11801 | - | - | 8,500,000 | 7,900,000 | - | - | 11 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11. | நீர்ப்பாசன மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சு | 15201 | - | - | 7,000,000 | 5,000,000 | - | - | 12 |
| 12. | உற்பத்தித் திறன் மேம்பாட்டு அமைச்சு | 18101 | 1,000,000 | 17,000,000 | - | - | 2,000,000 | 55,500,000 | 13 |
| 13. | விசேட செயற்பாடுகளுக்கான பணியகம்(சிரேஷ்ட அமைச்சர்கள்) | 00301 | - | - | - | - | 2,000,000 | 5,700,000 | 14 |
| 14. | சிவில் விமானச் சேவைகள் அமைச்சு | 17601 | - | - | 3,300,000 | 2,008,661 | - | - | 15 |
| 15. | மாவட்ட செயலகம், கொழும்பு | 25501 | - | - | 34,000,000 | 32,800,000 | 180,000,000 | 190,000,000 | 16 |
| 16. | மாவட்டச் செயலகம், கம்பஹா | 25601 | - | - | 64,000,000 | 57,500,000 | - | - | 17 |
| 17. | மாவட்ட செயலகம், கேகாலை | 27901 | - | - | 32,500,000 | 29,000,000 | - | - | 18 |
| 18. | மாவட்ட செயலகம், வவுனியா | 26601 | - | - | 7,500,000 | 6,700,000 | - | - | 19 |
| 19. | மாவட்ட செயலகம், மட்டக்களப்பு | 26901 | - | - | - | - | 67,000,000 | 89,000,000 | 20 |
| 20. | போக்குவரத்து அமைச்சு | 11401 | - | - | 4,500,000 | 3,500,000 | - | - | 21 |
| 21. | அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு | 17301 | - | - | - | - | 2,500,000 | 6,535,000 | 22 |
| 22. | வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சு | 18201 | - | - | - | - | 2,000,000 | 6,000,000 | 23 |
| 23. | தேசிய மரபுரிமைகள் அமைச்சு | 14201 | 23,550,000 | 23,050,000 | 12,000,000 | 1,400,000 | 80,000,000 | 26,000,000 | 24 |
| 24. | தேசிய நூதனசாலைகள் திணைக்களம் | 20801 | - | - | 5,900,000 | 5,700,000 | - | - | 25 |
| 25. | சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மேம்பாட்டு அமைச்சு | 18001 | - | - | - | - | 2,000,000 | 5,800,000 | 26 |
| 26. | தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சு | 18401 | - | - | - | - | 2,000,000 | 3,700,000 | 28 |
| 27. | கலாசாரம் மற்றும் கலை அமைச்சு | 17701 | 1,000,000 | 1,500,000 | 300,000 | 10,900,000 | 2,000,000 | 73,000,000 | 29 |
| 28. | நிதி, திட்டமிடல் அமைச்சு | 10201 | - | - | 11,000,000 | 8,000,000 | - | - | 30 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 29 | மதிப்பீட்டுத் திணைக்களம் | 25001 | - | - | - | - | 28,000,000 | 60,000,000 | 31 |
| 30 | அரசிறைக் கொள்கைத் திணைக்களம் | 23801 | - | - | 1,200,000 | 1,100,000 | 8,000,000 | 9,125,000 | 32 |
| 31. | தேசிய திட்டமிடல் திணைக்களம் | 23701 | 7,065,000 | 4,000,000 | - | - | - | - | 33 |
| 32. | தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு | 17801 | - | - | - | - | 2,000,000 | 2,750,000 | 34 |
| 33. | உயர் கல்வி அமைச்சு | 17101 | - | - | 4,900,000 | 2,800,000 | - | - | 35 |
| 34. | தேர்தல்கள் திணைக்களம் | 02001 | - | - | 16,000,000 | 13,000,000 | - | - | 36 |
| 35. | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | 13501 | - | - | 3,200,000 | 3,164,317 | - | - | 37 |
| 36. | தபால் சேவைகள் அமைச்சு | 10801 | - | - | 2,400,000 | 2,300,000 | - | - | 38 |
| 37. | துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | 11701 | - | - | - | - | 25,000,000 | 27,000,000 | 39 |
| 38 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | 01301 | - | - | 292,000 | 0.00 | - | - | 40 |
| 39. | மீள்குடியேற்ற அமைச்சு | 14501 | - | - | 4,000,000 | 3,825,000 | - | - | 41 |
| | மொத்தம் | | 1,937,613,000 | 1,963,792,000 | 1,873,592,000 | 1,796,197,978 | 776,500,000 | 1,393,864,151.36 | |

20012 ஏப்பிறல் 18 ஆம் திகதி
கொழும்பு - 01.

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

சமூக சேவைகள் அமைச்சர்,— முதியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2000ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, முதியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின் 17ஆம் 18ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 34 ஆம் பிரிவின் கீழ் சமூக சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2012 மார்ச்சு மாதம் 16ஆந் திகதிய 1750ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.05.08ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 11.

சுற்றாடல் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் 32ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 23ச ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 29 ஆம் திகதிய 1738/37ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2 0 12. 0 5 .11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 15.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 16.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 19.

கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

20.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

21.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.